தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 18 /2020

நாள். 13.10.2021

M. இராஜசேகரன்,போத்தனூர்,
நாமக்கல் மாவட்டம் – மனுதாரர்

ஆணையாளர், நாமக்கல் நகராட்சி – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், போத்தனூர், கிழக்கு தெரு, 27/8, எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. ராஜசேகரன் அவர்களின் 23.01.2020 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 27.01.2020 அன்று பெறப்பட்டு 18/2020 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரான நாமக்கல் நகராட்சி ஆணையர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் மனுதாரர் மனு மீதான அவர் அளித்த அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், போத்தனூர், கிழக்கு தெரு, 27/8, எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. ராஜசேகரன் அவர்கள் நாமக்கல் கோட்டை சாலையில் (1)குமார் பாலிகிளினிக், (2) அன்னை கண் மருத்துவமனை, (3) சண்முகா இருதய மருத்துவமனை, (4) நவனி பரிசோதனை மையம் மற்றும் மருந்தகம், (5)ஹோட்டல் ஆனந்தபவன், (6) SKCமேன்சன், (7) விஸ்டம் மாளிகை, (8) S.R.காம்ப்ளக்ஸ் போன்ற கட்டடங்கள் நகர் ஊரமைப்புச்சட்டத்தின் படி அனுமதி பெறாமல் கட்டப்பட்டு, அதற்கு நாமக்கல் நகராட்சி ஆணையர் கட்டிட அனுமதியும், சொத்துவரி விதிப்பும் செய்து உள்ளதாக புகார் தெரிவித்துள்ளார். மேலும் இவ்வகை கட்டடங்களுக்கு, வருவாய்துறை தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம், 1965 (T.N. Public Buildings – Licensing Act, 1965) கீழ் உரிமம் வழங்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான உரிமம் பெற்றார்களா என்று

தெரியவில்லையென்று குறிப்பிட்டுள்ளார். நாமக்கல் நகராட்சி ஆணையர் மேற்கண்ட கட்டடங்களுக்கு அனுமதி வழங்கும் முன் கார் நிறுத்துவதற்கு போதிய இடம் உள்ளதா என்று கணக்கில் கொள்ளாமல் அனுமதி வழங்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார்கள் தெரிவித்து பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(i) அரசாணை நிலை எண்.289, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 16.12.2020–ல் நகர் ஊரமைப்புச்சட்டம், பிரிவு 56 மற்றும் 57ன்படி அனுமதி பெறாத கட்டடங்களை இடிக்க, நகராட்சி ஆணையாளர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுளளதால், அதன்படி மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடங்களை இடிக்க வேண்டும் ;

(ii) அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடங்களை கட்ட அனுமதி அளித்தும், அதற்கான கதவு எண் அளித்தும், சொத்துவரி வசூலித்ததற்காகவும் சம்பந்தப்பட்ட இன்னாள்/முன்னாள் நகராட்சி ஆணையாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்,

(iii) அவ்வகை கட்டிட உரிமையாளர்களிடமிருந்து, வசூலிக்கப்படாத சொத்து வரி, கட்டிட வரைபடத்திற்கான தொகை, ஆகியவற்றை வசூலிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

3. இம்முறைமன்ற அழைப்பாணை எண்.18/ந/2020 நாள் 11.08.2021 மூலம் முறையீட்டு மனுதாரர் திரு எம். ராஜசேகரன் மற்றும் எதிர்மனுதாரரான நாமக்கல் நகராட்சி ஆணையர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 15.09.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் அன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. 15.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் நாமக்கல் நகராட்சி ஆணையர் ஆஜராகி கீழ்க்காணுமாறு வாக்குமூலம் அளித்தார்:–

" மனுதாரர் திரு ராஜசேகர் என்பவர் அளித்துள்ள மனுவில் கண்டுள்ள கோட்டையூரில் அமைந்துள்ள குமார் பாலி கிளினிக், கண்ணகி மருத்துவமனை, சுந்தரம் அன்னை கண் மருத்துவமனை, சண்முகலதா கார்டியா மருத்துவமனை மற்றும் எஸ்.கே.சி. மேன்சன், எஸ். ஆர். காம்ப்ளக்ஸ் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி பெறப்படாததால் அவற்றின் உரிமையாளர்களுக்கு நகராட்சிகள் சட்டம் 1920ன்படி அறிவிப்பு கொடுத்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள விஸ்தம் லாட்ஜ் கட்டிடம் தற்போது இல்லை என்றும் இம்முறை மன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் குமார் பாலி கிளினிக், கண்ணகி மருத்துவமனை, சுந்தரம் அன்னை கண் மருத்துவமனை, சண்முகலதா கார்டியா மருத்துவமனை, நவனி டயகனிக் சென்டர் மற்றும் எஸ்.கே.சி. மேன்சன், எஸ். ஆர்.காம்ப்ளக்ஸ் ஆகியவை அமைந்துள்ள கட்டடிடங்களின் உரிமையாளர்களிடமிருந்து தொழில் வரி மற்றும் Trade License

வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு Trade License விதிப்பதில்லை. இது தொடர்பான எனது 14.09.2021 நாளிட்ட அறிக்கையினை இம்முறை மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். மேலும் தொழில்வரி மற்றும் Trade License வசூலிக்கப்பட்டதற்கான ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கிறேன் என இம்முறைமன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு நாமக்கல் நகராட்சி ஆணையர் 31.01.2020 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டார். நாமக்கல் நகராட்சி ஆணையாளரின்14.09.2021 நாளிட்ட அறிக்கையில் மனுவில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட விவரப்படியான கட்டிடங்களில் வரிசை எண்.4ல் கண்டுள்ள கட்டிடத்திற்கு மட்டும் கட்டிட அனுமதி எண்.69/2007, நாள்.25.09.2007–ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரிசை எண் 1,2,3,5,6–ல் கண்டுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்ட விபரம் உரிய கோப்புகள் விபரம் கிடைக்கப்பெறவில்லை. எனவே சம்பந்தப்பட்ட கட்டிடங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920 பிரிவு 325, 313, 344ன் கீழ் அறிவிப்பு கொடுத்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. அதன் விவரம் இத்துடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என்று ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

<u>கட்டிடங்களின் அனுமதி விவரம்</u>

| வ. எண் | உரிமையாளர் பெயர் | கட்டிட அனுமதி விபரம் | | அனுமதி பெறாத கட்டிடத்தின் காலம் | கட்டிட அனுமதி விபரம் |
|---|---|---|---|---|---|
| | | அனுமதி | அனுமதி பெறாத கட்டிடத்தின் விபரம் | | |
| 1. | திரு ராஜ்குமார், பாலிகிளினிக், கண்ணகி மருத்துவமனை | இல்லை | விபரம் இல்லை | 1978 | – |
| 2. | திரு சுந்தரம், அன்னை கண் மருத்துவமனை | இல்லை | – | 1977 | – |
| 3. | திரு மாசிலாமணி, சண்முகலதா சண்முகா கார்டியா மருத்துவமனை | இல்லை | – | 1990 | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | திரு நடேசன், நவனி டயகனிக் சென்டர் | க.அ..எண்..69/2007, 25.09.2007 அன்று வழங்கப் பட்டுள்ளது | – | 2007 | க.அ..எண் 69/2007, 25.09.2007 அன்று வழங்கப் பட்டுள்ளது |
| 5. | திரு நடேசன் ந, னி மெடிக்கல் | இல்லை | – | 2015 முதல் 2017 | – |
| 6. | முல்லை இன்வெஸ்ட்மென்ட் & ஹோட்டல் ஆனந்தபவன் | இல்லை | – | 2011 | – |
| 7. | திரு கொழந்தவேலு S.K.C.மேன்சன் | இல்லை | -- | 1972 | – |
| 8. | விஸ்டம் லாட்ஜ் | தற்போது கட்டிடம் இல்லை | – | – | – |
| 9. | திருமதி கண்ணகி S.R.காம்ப்ளக்ஸ் | – | – | UACNO/43/2016/TPI –II | அனுமதி பெறாத கட்டிடத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி அறிவிப்பு வழங்கி வழக்கு தொடரப்பட்டு வழக்கு STC No.1959/= 2016 , 23.12.2016–ல் ரூ.500/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது |

௫) 15.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் ஆஜரான நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்கள் அளித்த வாக்குமூலத்தில் உறுதியளித்தவாறு மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு தொழில் வரி மற்றும் Trade Licence வசூல் செய்யப்பட்டு வருவதற்கான விவரங்களை கீழ்க்காணும் பட்டியலில் சமர்ப்பித்துள்ளார்.

| வ. எண். | உரிமையாளர் பெயர் | தொழில் வரி | | தொழில் உரிமம் கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | வருடம் | தொகை | வருடம் | தொகை |
| 1. | திரு ராஜ்குமார், பாலிகிளினிக், கண்ணகி மருத்துவமனை | 2016 நாளது வரை | 781/– | மருத்துவமனைக்கு உரிமம் பொருந்தாது. Not applicable. | |
| 2. | திரு சுந்தரம், அன்னை, கண் மருத்துவமனை | 2016 நாளது வரை | 781/– | மருத்துவமனைக்கு உரிமம் பொருந்தாது. Not applicable | |
| 3. | திரு மாசிலாமணி சண்முகலதா, சண்முகா கார்டியா மருத்துவமனை | 2016 நாளது வரை | 781/– | மருத்துவமனைக்கு உரிமம் பொருந்தாது. Not applicable | |
| 4. | திரு நடேசன், நவனி டயகனிக் சென்டர் | 2016 நாளது வரை | 781/– | 2017 | 500/– |
| 5. | திரு நடேசன், நவனி மெடிக்கல் | 2016 நாளது வரை | 781/– | 2017 | 500/– |
| 6. | முல்லை இன்வெஸ்ட்மென்ட் ஹோட்டல் ஆனந்தபவன் | 2016 நாளது வரை | 391/– | 2017 | 3000/– |
| 7. | திரு கொழுந்தவேலு, S.K.C. மேன்சன் | 2016 நாளது வரை | 391/– | 2020 | 750/– |
| 8. | விஸ்டம் லாட்ஜ் | 2016 நாளது வரை | தற்போது கட்டிடம் இல்லை | | |
| 9. | திருமதி கண்ணகி, S.R. காம்ப்ளக்ஸ் | 2016 நாளது வரை | 391/– | | Travel Agencies |

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, நாமக்கல் நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலம் அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

6. இந்நேர்வில் 15.09.2021 விசாரணையில் கலந்து கொள்ளுமாறு மனுதாரர் திரு எம். ராஜசேகரன் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் அன்று விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை.

7. மனுதாரர் திரு எம். ராஜசேகரன் தன் முறையீட்டு மனுவில் நாமக்கல் கோட்டை சாலையில் அமைந்துள்ள சில கட்டிடங்கள் நகர் ஊரமைப்பு சட்டத்தின்படி கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டு உள்ளதாக புகார் தெரிவித்துள்ளார். நாமக்கல் நகராட்சி ஆணையாளர் தன் அறிக்கையில் கட்டிட அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920, பிரிவு 325, 313, 344ன் கீழ் அறிவிப்பு கொடுத்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார். மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு தொழில் வரி மற்றும் Trade License வசூலிக்கப்பட்டு வருவதாகவும் அதன் விவரங்களை ஆவண ஆதாரங்களுடன் சமர்ப்பித்துள்ளார்.

8. இந்நேர்வில் கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்கள் என முறையீட்டு மனுதாரரால் புகார் கூறப்பட்ட கட்டிடங்கள் அனைத்தும் 5 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 10 (3) (c )–ல் " முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு தொடர்பான பொருட்பாடுகள் எதனையும் விசாரணை செய்தல் கூடாது " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் மனு மீது இம்முறை மன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க இயலாது என்பதால் நாமக்கல் நகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்று இம்மனு மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் அன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு M. ராஜசேகரன்,
27/8, கிழக்கு தெரு,
போத்தனூர் அஞ்சல் –
நாமக்கல் மாவட்டம்.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல்.
நாமக்கல் மாவட்டம்.

நகராட்சி நிர்வாக இயக்குநர்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032 — முத்திரை)

செயலாளர்
26-10-21